229.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 28 | பிங்கள ஞுல குருபூசை இதழ் 1வ [14—5—'77] | இதழ் 5

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# சைவ சமயத்தின் மாண்பு 11

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

சொற்றமிழ்ப் பாடல்களால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்திட்ட அற்புதச் செயல்கள் :—

1. குண்டையூர்க் கிழார் தந்திட்ட நெற்குவியல்களைச் சிவபெருமான் திருவருளால் பூதங்களைக் கொண்டு திருவாரூருக்கு எடுப்பித்துக் கொண்டார்.

2. திருப்புகலூர்த் திருக்கோயில் முற்றத்தில் தலைக்கு உயரமாக வைத்துப் படுத்திருந்த சுட்டசெங்கற்கள் அனைத்தும் தங்கக் கட்டிகளாக மாற, அதனை இறைவனது திருவருளினால் பெற்றார்.

3. திருப்பாச்சிலாச்சிரமத்திலும், திரு வோணகாந்தன் தளியிலும் இவர் பொன்வேண்டி சிவபெருமான் மேல் பதிகம் பாடி பொற்குவைதனை பெற்றிட்டார்,

4. திருமுதுகுன்றம் என்று அழைக்கப்பெறும் விருத்தாச்சலத்தில் சிவபெருமான் திருவருளால் பெற்ற பொன் முழுவதையும், அங்குள்ள மணிமுத்தாற்றில் போட்டுவிட்டு, அதனை திருவாரூரில் உள்ள கமலாலயத் திருக்குளற்திற்துச் சென்று மூழ்கி, அப்படியே குறைவு இன்றி எடுத்துக் கொண்டார்.

5. திருக் குரு காவூருக்கு அருகில் சிவபெருமான் அந்தணக் கோலத்துடன் வந்து தந்திட்ட, பொதிச் சோற்றினைப் பெற்று உண்டார்.

6. திருவையாற்றைத் தரிசிக்கச் செல்லும் பொழுது, காவிரியாற்று நீர் பெருகி, 'அவருடைய பயணத்தைத்தடை செய்ய, பதிகம்பாடி நீரோட்டத்தை தடைசெய்து' நிறுத்தி ஆற்றினைக் கடந்து சென்றார்

7. திருப்புக்_ கொளியூர் அவிநாசியில் ஐந்தாண்டுப் பருவத்தில் முதலையால் உண்ணப் பெற்று மாண்ட, அந்தணச் சிறுவனை, இரண்டு ஆண்டுகள் சென்றபின்னர், அதே முதலை வாயிலிருந்து ஏழாண்டுச் சிறுவனாக வரும்படி அழைத்துக் கொடுத்தருளினர்.

8. திருவஞ்சைக் களத்தில் சிவபெருமானை வேண்டிக் கயிலாயத்திலிருந்து வந்த வெள்ளை யானையின் மீது ஏறினர். பின்னர், தேவரும் மூவரும் எதிர்கொண்டழைக்கத் திருக்கை லாயத்தை அடைந்து பதிகம்பாடி, அப்பதிகம் நிலவுலகிற்கு வந்து வழங்கும்படி செய்தருளினர்.

9. இவர், திருமணத்தில் செய்து கொண்ட சபதத்தை நிறைவேற்ருமல், சங்கிலியாரைப் பிரிந்து திருவாரூருக்குப் போக உத்தேசித்தார். அப்போது திருவொற்றியூர் எல்லை யைத்தாண்டியவுடன் அவர் இரண்டு கண்களும் தெரியாமல் குருடாயினர்.

அதன் பின்னர் அவர் சிலரது கையைப் பற்றிக்கொண்டு வெண்பாக்கம் சென்று சிவனைத் துதிக்க, இவருக்கு அத்தலத் தில் பரமசிவன் ஊன்றுகோல் அளித்தார். அதனைப் பற்றிக் கொண்டு. கச்சி ஏகம்பம் சென்ருர். அங்கு எம்பெருமானை வழிபாடு செய்ததன் மூலம், இடக்கண் தெரியப்பெற்ருர்" பின்னர், திருவாரூர் வந்து வலது கண்ணும் தெரியப் பெற்ருர்.

10. இவர் சிவபெருமானைத் தூது அனுப்பியது தகாத காரியம் என்று திருப்பெருமங்கலத்திலிருந்து ஏயர்கோன் கலிக்காம நாயனுர் சுந்தரர் மீது கோபம் கொண்டார். இதனை அறிந்த சிவபெருமான் கலிக்காம நாயனுருக்குச் சூலை நோய் உண்டாக்கி அது, சுந்தரராலன்றித்தீராது என்று அவருக்குச்

சொல்ல, கலிக்காமநாயனுர் அந்நோயைச்சுந்தரர் மூலம் நீக்கிக் கொள்ள விரும்பவில்லே. அப்படியிருந்தும், சிவபெருமான் சுந்தரரை அவரிடம் அனுப்ப, சுந்தரர் வருவதை அறிந்த கலிக் காமநாயனுர் உடைவாளினுல் தன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். இதனைப் பார்த்திட்ட சுந்தரரும் தன் வயிற்றைக் கிழித்துக் கொள்ள முயற்சிக்கையில், சிவபெரு மான், கலிக்காமநாயனுரை உயிர்ப்பித்தார் உடனே, இரு வரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

11. திருநாரைக்காரோணத்தில் இவர் சிவபெருமான், மேல் பதிகம்பாடி, பொன்னும், நவரத்தினமும். ஆபரணங் களும், வஸ்திரங்களும் குதிரைகளும், உடைவாளும் பெற்ருர்

12. சேரமான் பெருமாள் நாயனுரால் இவருக்குக் கொடுக்கப்பெற்ற திரவியத்தை வரும் வழியில், சிவபூதகணங் களாகிய கள்ளர்கள் பறித்துக் கொண்டார்கள். அதன் காரண மாக திருமுருகன் பூண்டியில் சுவாமி மேல் பதிகம் பாடி அத் திரவியத்தை மீண்டும் பெற்ருர்.

அடுத்து, வண்டமிழ்ப் பாடல்களால் மாணிக்கவாசக சுவாமிகள் செய்திட்ட அற்புதச் செயல்கள்:-

மாணிக்கவாசகரின் தீந்தமிழ்ப் பாடல்கள் சிவபெரு மானைத் திருவருள் சுரக்கச் செய்து, நரிகளைக் குதிரைகளாக வும், அவரையே அக்குதிரைகளுக்குத் தலைவராகவும் வருமாறு செய்தன. அன்று இரவே, அக்குதிரைகள் அனைத்தும் மீண் டும் நரிகள் ஆகிவிட்டன. இதனுல், மன்னன் மாணிக்க வாசகரை ஆற்றின் சுடுமணலில் நிறுத்தித் துன்புறுத்தினுன். ஆனுல், சிவபெருமான் மாணிக்கவாசகர் மீது கருணை பாலித்து வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கெடுக்கச் செய்தார்.

பக்தியில் சிறந்த வந்தி என்னும் பிட்டு வணிகம் செய்யும் பெண்ணுக்காக, சிவபெருமான் கூலியாளாக வந்து மண்சுமந் தார். ஆனல் மன்னனே, தனது ஏவலாட்களை வைத்து, கூலியாளாக வந்து மண் சுமந்திட்ட சிவபெருமான் முதுகின் மீது பிரம்பால் அடித்தான். அந்தப் பிரம்படியானது, மக்கள் அனைவர் முதுகிலும் படும்படி ஆயிற்று.

அடுத்து, மணிவாசகர், ஈழநாட்டு மன்னன் ஒரு வனின் ஊமை மகளைப் பேசும்படி செய்தார். அத்துடன் அவளைக் கொண்டே, சைவசமயத்தில், பிறருக்குள்ள ஐயங் களைத் தான்கேட்க, அவற்றிற்குப் பதில் உரைக்கும்படி செய் தருளினர். மேலும், சைவசமயத்தை இகழ்ந்து பேசிய ஈழ நாட்டு புத்த சமயத்தவரை, ஊமைகளாகும்படி செய்திட்டார் இறுதியாக தில்லைத்திருப்பதியில், கனகசபையின் முன்னே, ''திருவாசகத்திற்குப் பொருள் சிற்றம்பலவனே'' என்று சுட்டிக் காட்டிப் பூதவுடலை நீக்கிச் சிவமானர்.

தொடரும்

234.

# அருள் மொழி அமுது.

34. கழுமலமுது பதிகவுணியர்
E. மதுரநாயகர் மதுரைவருகை

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

திருச்சிற்றம்பலம்

திரு வீழி மிழலையில் தங்கியிருந்த காலத்து மழையின் மையினால் நாட்டின் செழுமை மாறிப் பஞ்சம் வந்தது. ''சிவனடியாருக்குக் கவலையும் வருமோ'' என எண்ணினர் சம்பந்தரும், நாவுக்கரசரும்

மண்ணின் மிசை வான் பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண் சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில் வரும் பூசையாற்ற,
மிக்க பெரும் பசி உலகில் விரவக்கண்டு
பண்ணமரும் மொழியுமையாள் முலையின் ஞானப்
பாலருவாயருடன் அரசும் '' பார்மேல்
''கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்கும்
கவலை வருமோ'' எனக் கருத்தின் மேற் கொண்டார்.

அன்றிரவு இறைவனின் அடிவணங்கி இருவரும் துயின்றனர். இறைவன் அவர்களது கனவில் தோன்றி ''உலகினரைப் பீடிக்கும் பசி, பிணி, நோய், பஞ்சம் முதலான உம்மைப்

பிடிக்காதெனினும், உங்களிருவரையும் சேர்ந்த அடியார்களின் கவலை நீங்குவதற்காக, நம் சன்னதியில் கிழக்கிலுள்ள பீடத்தில் சம்பந்தருக்கும் மேற்கிலுள்ள பீடத்தில் அப்பருக்கும் தினம் ஒரு பொற் காசு வைக்கிறோம்.'' என்றனர்.

துயிலொழிந்து இருவரும் கோயில் சென்ற காலத்தின் காசுகள் அவ்வாறே கிடைத்தன. மகிழ்ச்சி கொண்டு இரு பெருமக்களும் தமது மடங்களில் அடியார்களுக்கும் ஏனையோருக்கும் உணவளித்தனர்

பணத்திற்காக நம்நாட்டில் எந்த வேடமானாலும்போடும் சிலர் என்றுமே யிருந்திருக்கிறார்கள் போலும்! பஞ்சகாலத்தில் சோறுகிடைக்கும் என்பதால் சிலர் சிவனடியார் வேடம் பூண்டு உணவருந்த வந்தனர். இதனாலேயே பரம்பரை ஆண்டியா பஞ்சத்திற்கு ஆண்டியா? என்று ஒரு விளையாட்டான பழமொழி கூட உண்டாயிற்று என்பர்.

அப்பர் சுவாமிகளின் திருமடத்தில் சிறிது நேரம் முன்னரே உணவு அளிக்கப்பட்டது. சம்பந்தர் திருமடத்தில் சிறிது தாமதமாயிற்று. சம்பந்தப் பெருமான் அமுது தயாரிப்பவர்களை அழைத்துக்கேட்க ''நமது காசுக்கு கடைத் தெருவில் வட்டம் கேட்கின்றனர் அப்பர் சுவாமிகளது காசுக்கு வட்டம் (Commission - வாசி) இல்லாது தருவதால் சிறிது தாமதமாகின்றது'' என்றனர், '' சிவபெருமான் பக்ஷபாதமில்லாதவர். எனினும் நமக்கு வாசியுள்ள காசும், அப்பருக்கு வாசியில்லாத காசும் அருளும் காரணம் என்ன?'' என ஆலோசித்து ''தொண்டர்ப் பெறும் காசு'' என்றபடி அவர் உழவாரப்படை முதலான தொண்டுகள் செய்வது காரணம் போலும்'' என எண்ணி ''நான் பாட்டுமூலம் தொண்டு செய்கிறேன். வாசியில்லாக்காசு பெறுவேன்'' எனத் திருக்கோயிலில் சென்று.

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே

திருச்சிற்றம்பலம்

எனப்பாட, இறைவன் வாசியில்லாத காசை அருளினர். வட்டமில்லாது கடைவீதியிலுள்ளோர் வேண்டும் பொருள் களைத் தந்தனர். சம்பந்தர்மடத்திலும் விரைவில் உணவிடப் பட்டது. சிறிது நாட்களுக்குப் பின் மழைபெய்து நாடுவள மடைந்தது. பஞ்சம் எவ்வாறு இருந்தது என்றபாடலை முன்னே காட்டினேம். எவ்வாறு பஞ்சம் தீர்ந்தது என்பதைக்காட்டும் அழகிய கவிதை இதோ!

அவனி மிசை மழை பொழிய உணவு மல்கி
அனைத்துயிரும் துயர் நீங்கி அருளினலே
புவனமெலாம் பொலிவெய்தும் காலம் எய்தப்
புரிசடையார் கழல் பல நாள் போற்றி.

என்ற வரிகள் இன்பமளிப்பன : பின்னர் சம்பந்தரும் அப்பரும் ஸ்ரீவாஞ்சியம் - திருவாரூர் – திருநெல்லிக்கா, முதலான தலங்கள் வழியாக திருமறைக்காடு என்ற வேதாரண்யத்தை அடைந்தனர்.

வேதத்தினல் மூடப் பெற்றிருந்த திருக்கோயிலின் முன்னர் வந்த சம்பந்த மூர்த்திகள் "திருக்கதவம் திறக்குமாறு பாடுங்கள்" என அப்பர் பெருமானை வேண்டினர். அதற்கிணங்கிய அப்பர் பெருமான் பத்துப்பாடல்கள் பாடியும் கதவம் திறக்காதது கண்டு "இரக்கமொன்றிலீர்" எனக்கேட்டுப் பாடத் திருக்கதவம் திறந்தது. இருவரும் திருமறைக்காட்டு இறைவரை வணங்கியது பற்றி

அன்பிருக் களவு காணா; ஆனந்த வெள்ளம் மூழ்கி
என்புநெக் குருக நோக்கி இறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவும் ஆற்றார்; மொழிதடுமாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்

என்று விளம்பி விவரிக்கிறது சேக்கிழாரின் மந்திரக்கவிதை இறைவனை இருவரும் வணங்கிய பின், கதவு அடைக்கப் பாடுமாறு சம்பந்த மூர்த்தியை அப்பர் பெருமான் வேண்டினார்.

## திருச்சிற்றம்பலம்

சதுரம் மறை தான் துதி செய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா!
இதுநன் கிறை வைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொளுங் கருத்தாலே

## திருச்சிற்றம்பலம்

என்று தேவாரம் பாட திருக்கதவம் மீண்டும் மூடிக் கொண்டது. அன்று முதல் உலகத்தவர் உள்ளே சென்று இறைவரைத் தரிசித்துத் திரும்பி வருமாறு வழக்கம் ஏற்பட்டு உலகினர் இன்புற்றனர்.

அன்றிரவு துயிலும்போது அப்பர் பெருமானின் கனவில் தோன்றிய இறைவர் திருவாய்மூர் வருமாறு அருள, அப்பர் பெருமானும் அங்கு சென்றனர். விழித்தெழுந்த சம்பந்தப் பெருமான் அப்பர் பெருமானைத் தேடித் திருவாய்மூர் வர இறைவனின் காட்சி கிடைத்தது

## திருச்சிற்றம்பலம்

தளரிள வளரென உமைபாடத் தாளம் இடவோர் கழல் வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக்கிறிமையார்
விளரிள முலையவர்க் கருணல் கி வெண்ணீ றணிந்தோர் சென்னியின் மேல்
வளரிள மதியமொடி வராணீர் வாய் மூரடிகள் வருவாரோ.

திருச்சிற்றம்பலம்

என்று தேவாரம் பாடினார் சம்பந்தர். பின்னர் இருவரும் திருமறைக்காடு சேர்ந்தனர்.

இது இவ்வாறாக, பாண்டியதேசத்திலே, முன் பிறப்பில் செய்த பாபம் காரணமாகப் பாண்டியன் சமணமதம் தான் மேன்மையானது என எண்ணி அதனைத் தழுவ சைவம் தளர்ந்தது.

(சமணத்தில் தலையிலுள்ள முடிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எடுப்பாரே தவிர, கத்தியெடுத்து மழிக்க மாட்டார். பாயையே தமது உடலை மறைக்க உபயோகிப்பார். மயிர்ப் பீலிகொண்டு தரையைப் பெருக்கி பூச்சி புழுபோன்ற பிராணிகளை விலக்கி நடந்து செல்வார். இருட்டுதற்கு முன் உண வருந்துவார். விளக்கேற்றினால் விட்டில்கள் வந்து விழுந்து விடும் என்ற கொள்கை. இப்படியெல்லாம் உள்ள கொள்கைகள் நம் நாட்டிற்குப் புதுமையானவைகளல்ல

கொல்லாமையும் பொய்யாமையும் சைவத்தின் இருகண்கள். இப்படிப்பட்ட சைவக் கொள்கையைக் காட்டிலும்,(மக்கள் தழுவும்படியான மேன்மையான வேறு என்ன கொள்கைகள் சமணத்திலிருந்தன என்பது யோசிக்க வேண்டிய செய்தியாகும்). இந்த நிலை நிறைந்து பாண்டி நாடு சைவத்தை மறந்திருந்ததுஎன்கிறார் சேக்கிழார்.

பறிமயிர்த்தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச்
செறியுமுக் குடையுமாகித் திரிபவர் எங்குமாகி
அறியும் அச்சமய நூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினிற் சித்தம் செல்லாநிலைமையில் நிகழும் காலை.

பாண்டி நாட்டினில் பாண்டிமா தேவியும் மந்திரியான குலச்சிறையாரும் மட்டும் செழியன் முன்பு புலப்படா வகை சைவத்

துறையில் ஒழுகினர். நெற்றியில் திருநீறிட்டால் அரசன் அறிவான். மார்பில் மாத்திரம் திருநீறிட்டார். அரசன் அதை அறிந்து கொள்ளவில்லை. இவர்கள் இவ்வாறு செய்ததை

திருச்சிற்றம்பலம்

முத்தின் தாழ் வடமும் சந்தனக்குழம்பும் நீறும் தன் மார்பினின் முயங்க
பத்தியார் கின்ற பாண்டிமாதேவி பாங்கொடு பணி செய்யநின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர்மரகத மெடுத்தாற் போல்
அத்தனு ருமை யோடின் புறுகின்ற ஆலவாயாவது மிதுவே

திருச்சிற்றம்பலம்

என்ற சம்பந்தர்பாடல் தெரிவிக்கின்றது

பாண்டிமாதேசத்தில் பாண்டிமாதேவியும், குலச்சிறையாரும் ஞானசம்பந்த மூர்த்தியின் பெருமையைக் கேட்டு, வெகுதூரத்திலிருந்த போதிலும் அவரது திருவடி பணிந்த மாதிரி மகிழ்ந்து, தனக்கு அந்தரங்கமான சிலரைத் திருமறைக்காடு சென்று சம்பந்தப் பெருமானிடம் பாண்டி நாட்டின் நிலைகூறி வருமாறு பணித்தனர். அவர்களும் திருமறைக்காடு வந்து, சம்பந்தப் பெருமானின் மடாலயத்தையடைந்து வாயிலுள்ளோரிடம் கூற, சம்பந்தப்பெருமான் அவர்களிடம் செய்தி கேட்டறிந்தனர். திருநாவுக்கரசர், மதுரைக்குச் சம்பந்தர் புறப்படுவது அறிந்து ''சமணர் வஞ்சகர். தங்களுக்கு கிரகநிலைகளும் சரியில்லை'' எனக் கூறினர் (பாண்டிமாதேவியார் வயது முதிர்ந்த அப்பர் பெருமானை ஏன் அழைக்கவில்லை. என்றால் அப்பர் ஏற்கனவே சமணத்திலிருந்தவர், அவர் வெற்றி பெற்றாலும், சமணமந்திரங்களைக் கொண்டு வெற்றி பெற்றார் எனச் சமணர் கூறுவர் எனவே சம்பந்தப் பிள்ளையாரை அழைத்தனர் என்பது குறிப்பு)

கவலையடைந்து அப்பரிடம் "இறைவனருள் பெற்றவர் கட்கு எல்லா நாள்களும் கோள்களும் நல்லவையே"

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்தெனுளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்

எனக் கோளறு பதிகம் பாடி, அப்பரை சோழ நாட்டிலேயே இருக்குமாறு வேண்டிக்கொண்டு, வேதவனப் பெருமானை வணங்கி விடைபெற்று அகஸ்தியன் பள்ளி, திருவிடும்பாவனம் கொடுங்குன்றம் முதலான தலங்கள் வழியாக மதுரை வந்தனர்.

திருச்சிற்றம்பலம்

2141

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

# திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள்.
தேவகோட்டை

## பரமாகாசத்து அழுந்தல்

(முன் தொடர்ச்சி மலர் 28, இதழ் 1, பக்கம் 76.)

### செய்யுள்—36

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாமென் றுந்தீ பற
நாதற் கிடமதென் றுந்தீ பற

சுக்கில சுரோணிதக் கூட்டத்தில் உயிர் பதிகின்ற போது நாலாவது பூதமாகிய வாயுவும் முப்பத்தாருவது தத்துவ மாகிய நாதமும் உடன் பதிந்து தேகம் பரிணமிக்கும். இவ் வுண்மையை ஆசாரியரது அநுக்கிரகத்தால் அறிந்து, நாதத் தையும் பிராணவாயுவையும் கூட்டிப் பரமாகாசத்தில் அழுந்தி ஒன்றினால், நாலாம் நிலையாகிய சிவ சாயுச்சியம் அப்பொழுதே கைகூடும். அதுவே, பரம்பொருளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

கேவல நிலையில், இச்சா ஞானக் கிரியா சத்திகளின்

இயக்கமின்றிச் சடம் போற்கிடந்த உயிர், சகல நிலையில் சிவ பெருமானால் மாயையிலிருந்து ஆக்கியளிக்கப் பெற்ற தநு கரண, புவன, போகங்களைப் பெற்றுச் சிறிது சுதந்தரம் பெற்றிருக்கும். அந்தச் சுதந்தரம், பரிபூரண சுதந்தரமாகாது வண்டியில் பூட்டப்பெற்ற குதிரை, நடந்து செல்லும் சுதந் தரத்தை, வண்டியினுள்ளிருந்து கடிவாளக் கயிறுகளைப் பற் றியிருக்கும் வண்டிக்காரனுக்குக் கட்டுப்பட்டுப் பெற்றிருப் பதைப் போலச், சாலநிலையிலிருக்கும் ஆன்மா, அதனைச் செலுத்துகின்ற சிவசத்தியின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியே தொழிற்படும்.

சுரோணிதமாகிய நிலத்தில், சுக்கிலமாகிய விதைஊன்றப் பெற்று அதிலிருந்து தேகம் தோன்றுகிறதென்பது, அனை வரும் அறிந்த உண்மை. தேகத்தில் சீவன் பதிகிறபொழுது சிவபெருமானுடைய கிரியா சத்தியினால் ஐம்பெரும் பூதங் களில் நான்காவதாகிய வாயு பூதமும், தத்துவங்களில் முதற் கண் உள்ள சத்தப் பிரமமாகிய நாதமும் உடன் பதிகின்றன. அங்ஙனம் பதிந்த வாயுவானது, நாடிகள் தோறும் பரவி நிறைய. இறுதியில் சீவனுக்குப் பிரதானமான பிராணவாயு கடைசியில் மரணம் உண்டாக்குவதற்காக நாபிச் சக்கரத்தின் கீழே சென்று பதியும் சத்தப் பிரமமான நாதம், உடம்பி லுள்ள இடங்கள் தோறும் நிற்கும் எழுத்துக்களாய் அமர்ந்து, முடிவில் மரணம் உண்டாக்குதற் பொருட்டு, மூலாதாரத்திலே பிரணவமாகப் பதிந்திருக்கும், இவ்வுண்மையை நூல்களின் வாயிலாக அறிவுக்குப் புலனாக்கிக் கொள்ளுவது முதற்படி. அநுபவம் உடைய ஞானதேசிகரை அடுத்து, அவரது அநுக் கிரகத்தால் சத்திபீசம் சிவபீசம் கூடிய பிரசாத மனுவைச் சாதகம் செய்து மனத்தை ஒருமைப் படுத்தி, இந்தத் திருமந் திரத்தைக் கொண்டே நாதத்தை எழுப்பி, நாதத்தையும் பிராணவாயுவையும் கூட்டிச் சுழுமுனை வழியே செலுத்திப், பிரமரந்திரத்தில் கூடிப் பரமாகாசத்தில் அழுத்தினால் நாலா

வது நிலையாகிய சிவ சாயுச்சியம் அப்பொழுதே கைகூடும். இந்தச் சாதகம் அமையாத போது, முன்னர் இதுபற்றி நூலறிவு பெற்றதனுல் ஏதும் பயனில்லை. நாதம் சிவாம்சமும் பிராணவாயு சத்தியம்சமும் ஆகையால், இந்த அம்சங்களுக்குரிய பீசங்களுடன் கூடிய மனு, இவ்விரண்டு தத்துவங்களையும் மேலெழுப்புவதற்குச் சாதகமாயிருக்கும்.

சரீரத்திலுள்ள எல்லா உறுப்புக்களிலும் மேலானது சிரசு, "எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்பர். சிரசுக்கு மேலே பன்னிரண்டு அங்குலமாகிய துவாத சாந்தத் தானத்தில், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாகிய சிவம் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அந்தத் தானம் அதிசூக்குமம் ஆனதாதலின், அதனைக் காட்ட வல்லது பிராசாதயோகம் என்று சொல்லப் பெறும் "சிவராஜ யோகம்" ஒன்றே யாகும்." சிவயோகமே யோகம் அல்லாத யோகம், அவயோகம் ஆரமன் றறி" என்ற திருவாக்கு இதனைப் புலப்படுத்தும். ஆமையானது, ஏதாவதொரு சப்தம் எதிர்ப்பட்டால் தனது தலையையும் நான்கு கால்களையும் முதுகோட்டுக்குள் ஒடுக்கி அடங்கியிருக்கும், அது போல ஆன்மாவும் உலகப்பற்று வந்து தாக்கினுல், ஐம்பொறிகளையும் புறத்தே விடாது மனத்தகத்தே ஒடுக்கி, மூக்கிலுள்ள இரண்டு துவாரங்களின் வழியாக ரேசக பூரகம் செய்துவரும் பிராணவாயுவை மந்திரபூர்வமாய்த் கும்பித்துக், குதத்திற்கு இரண்டங்குலத்துக்கு மேலும் குறிக்கு இரண்டங்குலத்துக்குக் கீழும் உள்ள மூலாதாரத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயக மூர்த்தியைத் தியானித்து, நாபிக்குக் கீழேயுள்ள துவாரத்தில் தனது படத்தை வைத்துக் கொண்டிருக்கும் குண்டலியைப் பிராணவாயுவைக் கொண்டு எழுப்பிச் சுழுமுனை வழியாக மேலே செல்ல வேண்டும்.

மூலாதராத்திலிருந்து பிராந்திரம் வரையுள்ள ஆறு ஆதாரங்கள், கோஷகலை முதல் நாதாந்தகலை வரை எட்டுக் கலைகளாகிப் பிருதிவி தத்துவம் முதல் சத்தி தத்துவம்வரை வியாப்தம் கொண்டு, விநாயகர் முதல் சதாசிவர் வரை அதிபர்களாய் இருக்க அமைந்திருக்கும், பிரமாந்திரத்திலிருந்து துவாதசாந்தம் வரையுள்ள இடங்கள் சத்திகலை முதல் உன்மனுகலை வரை எட்டுக்கலைகளாகிச் சிவதத்துவ வியாப்தம் கொண்டு ஆகதசிவம், பரசிவம், அநாகத சிவம் ஆகியோர் அதிபர்களாயிருக்க அமைந்திருக்கும்.

மூலாதாரத்தில் கணபதியைத் தியானித்த சாதகன் பின்னர் சுவாதிட்டானமாகிய நாபிக்கடியில் கரணப்பிரமனை யும் மணிபூரகமாகிய நாபிக்கடியில் காரணப் பிரமனையும் மணிபூரகமாகிய நாபியில் காரணவிஷ்ணுவையும்அநாகதமாகிய இருதயத்தில் உருத்திரனையும் விசுத்தியாகிய கண்டத்தில் மகேசுவரனையும் ஆக்ஞையாகிய புருவ நடுவில் சதாசிவத்தை யும் அதன் மேற் பிரமாந்திரம் முதல் துவாத சாந்தம் வரை யுள்ள எட்டுக் கலைகளிலும் ஆகதசிவம், பரசிவம், அநாகத சிவம் ஆகிய மூர்த்திகளையும் தியானித்தல் வேண்டும். குருவருள் பெற்று இந்த முறையில் தியானபாவனையைச் செய்து வந்தால் முறையே ஆகாமியமலமும், பிரகிருதிமாயை, அசுத்தமாயை களும், மாயேமும், சுத்தமாயையும், திரோதானமும், ஆணவமலமுமாகிய எல்லா மலங்களும் சோதனையுற்று நீங்கும்.

அனைத்து மலங்களும் ஒழிந்த வேளையில். உன்மனு கலை யின் முடிவில் விளங்கும் அநாகத சிவம், அநந்த சூரியப் பிரகாசம் உடையவராய்க் காட்சியளிப்பார். இக்காட்சி, கருவி கரணங்கள் கடந்த அநுபூதி நிலையிலே அமைவதாகும். இந்த அரிய காட்சியில் ஒன்றியிருப்பதே, நாலாவது இட மாகிய சிவசாயுச்சியம் என்று சொல்லப் பெறுவதாகும். இதுவே பரம்பதியாகிய பெருமான் இருக்கும் இடம் என்பதும் உணர்ந்து கொள்ளத் தக்கது.

( தொடரும் )

245.

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 10

'சிவநெறித் தவமணி'
செல்வி : த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஐடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## இயற்பகை நாயனார் மனைவியார்

உலகில் எல்லாச் சமயங்களும், மக்கள் மனக்கவலையற்று வாழ்வதற்கு வழிவகுத்திருக்கின்றன. அவற்றுள், நமது சமயமாம் சைவ சமயம்' சிறப்பாக நான்கு உண்மைகளைச் சொல்லி, அதனால் மனக்கவலையற்ற வாழ்விற்கு வழி கோலியுள்ளது. அந்த நான்கு உண்மைகளை, இறைவனது அருளினால் சாக்கிய நாயனார் உணர்ந்ததாகச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கீழ்வருமாறு அருளியிருக்கிறார்.

1. செய்வினையும், (2) செய்வானும், (3) அதன்பயனும், (4) சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றிற்கு இல்லையென
உய்வகையால் பொருள் சிவம் என அருளாலே உணர்ந்தறிந்தார்.

நாம் இருக்கிறோம் என்பதும், பிறர் மூலம் நமக்கு இன்ப துன்பம் வருகின்றன என்பதும் யாவரும் அறிந்ததே, இவை

இரண்டும் நேரில் காணக்கூடியனவாயிருக்கின்றன. ஆனால் செய்யுளில் முதலாவதாகச் சொல்லப்பெற்ற செய்வினையும் நான்காவதாகச் சொல்லப் பெற்ற சேர்ப்பானாகிய கடவுளையும் யாவரும் உணரமுடியாமல் இருக்கிறோம் ஆனால் ஒருவன் பிறக்கும் பொழுதே ஆணாகவும், பெண்ணாகவும், பணக் காரனாகவும், ஏழையாகவும், அழகனாகவும், அழகில்லாத வனாகவும், பட்டணங்களில் பிறந்தவனாகவும். குக்கிராமங் களில் பிறந்தவனாகவும் எவ்வளவோ ஏற்றத்தாழ்வுகளில் பிறந்திருப்பதை நேரில் காண்கிறோம் அதற்குக் காரணம், அவரவர் முன் பிறவியில் செய்த புண்ணிய பாவமேயாகும் என்றும், மேலைத்தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம் என்றும் சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். முன் பிறவியையும், முன் செய்த புண்ணிய பாவங்களே. இப்பொழுது அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதையும் எவ்வாறு நிரூபிப்பது என்பது தான் கேள்வி. ஆனால் நாடி சாத்திரம் எனப்படும் இரேகை சாத்திரம் இதனை ஓரளவு நிரூபிக்கிறது.

இந்த சாஸ்திரத்தில் ஒருவருடைய கைகளைப் பார்த்து அதிலுள்ள இரேகைகளையும் புள்ளிகளையும் கொண்டு, அவர் பிறக்கும் பொழுது எந்தெந்த கிரஹம் எந்தெந்த இடத்தில் இருந்தன என்றும், அதனால் அவருடைய பெயரும், ஊரும், பெற்றோரும், படிப்பும், திருமணமும், பிறவிபரங்களும் கூறப்பெறுகின்றன.

பொதுவாக ஏடுகளை எடுத்து வாசித்தால், ரிஷிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறபாணியில் அவை அமைந் திருக்கின்றன. ஒருவருடைய பெயரைச் சொல்லி இவன் முன் சென்மங்களில் செய்த இன்ன பாவத்திற்காக, இந்த ஜென் மத்தில் இன்ன துன்பம் அனுபவிப்பான் இன்ன பிரார்த்தனை

செய்தால் அவை நீங்கும், என்று யாவரும் வியக்கும்படி எழுதப் பெற்றிருக்கின்றன. இவற்றிலிருந்து அறிவுடைய எவரும் நாம் பிறப்பதற்கு முன் சென்மங்களில் செய்த வினைகளுக்கு, இறைவனால் ஒரு நியாயத் தீர்ப்புப் போடப் பெற்றே பிறந்திருக்கிறோம் என்றும் இந்த ஜென்மத்தில் செய்யும் நல்வினை தீவினைகள் மறு ஜென்மங்களில் இன்ப துன்பங்களாக இறைவனால் ஊட்டப் பெறும் என்றும் யூகித்து உணர்ந்து கொள்ளக் கூடும் இதையே அருணந்தி சிவாச்சார்ய சுவாமிகள், சிவஞான சித்தியாரில்

பேறிழவு இன்பமொடு பிணிமூப்பு சாக்காடென்னும்
ஆறுமுன் கருவுட் பட்டது அவ்விதி அனுபவத்தால்
ஏறிடும் முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது
தேறு நீ இனிச்செய் கன்மம் மேலுடற் சேருமென்றே

என்று அருளியிருக்கிறார்.

உலகில் சுமார் 300 கோடி மக்களுக்கும் மேலாக இருக்கிறார்கள். நம் நாட்டில் கிடைத்துள்ள ஏடுகள் வெகு சொற்பமேயாகும். எனவே யாவருக்கும் இவ்வுலகில் தனித் தனி ஏடுகள் இருக்க முடியாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும் என்ற படி ஒருவருக்குரிய ஏட்டிலிருந்து மேற் சொன்ன சாத்திர நூற்கருத்துக்களை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. எனவே தான் நம் முன்னோர்கள் " ஆறும் முன் கருவுட்பட்டது " என்றும் "பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை, பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியா மாந்தருக்கு என் சொல்லுவேன் இறைவா கச்சியேகம்பனே என்றும் " யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால் " என்றும் அருளியிருக்கிறார்கள்.

நம்மிடம் உள்ள எல்லாப் பொருள்களுமே. ஏன். நாம் பெற்றுள்ள உடல் கூட இறைவனது உடைமையாகின்றன என்பதே சமயங்கள் கூறும் உண்மையாயிருக்க நம்மில் அநேகருக்கு அந்த உணர்வு வருவதில்லை. அதனுல் வீண் சச்சரவுகளும், சாந்தியின்மையும், அமைதியின்மையும் அதிக மாகின்றன நூற்றுக்கு நூறு சமய உணர்வோடு வாழ்ந்தவர் களே பெரிய புராணத்தில் 63 நாயன்மார்களாகவும் அவர் தம் மனைவியராகவும், மக்களாகவும், தாய் தந்தையராகவும் தாதி யாகவும் இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களில் இவ்விதமில் நம்மால் வந்திக்கப் பெறும் அம்மையார் இயற்பகை நாயனுரது மனைவியாராவர். இயற்பகை நாயனுரது சரித்திரம் உலகியலுக் குப்புறம்பானதாகத் தோன்றலாம் ஆனுல் அதிலிருந்து தெரிய வேண்டியது, அவர் எத்துணை அளவிற்கு இறைவனிடமும் இறைவனடியார்களிடமும் அன்பு கொண்டிருந்தார் என்பதும், மற்ற உலகப் பொருள்களில் பற்று நீங்கியிருந்தார் என்பதுமேயாகும்.

தனக்கு உரிமையில்லாத பொருள்களையெல்லாம் "என்னுடையது என்னுடையது" என்பது உலக இயல். அவ்வுலகிற்குப் பகையானவர். இயற்பகையார் எனவே அருளியலுக்குப் பகையாகாதவர் என்பது போதரும். இவரது ஊர் காவிரிப் பூம்பட்டினம். தொழில் வாணிகம். அளவற்ற செல்வமும் உடையவர், தானும் துய்த்துப் பிறரையும் துய்க்கச் செய்வதுவே செல்வத்தின் பயன் எனவே சிவனடியார்கள் யாது கேட்கினும் சிவன்தந்த பொருள் சிவனடியார்க்கே உரியது என்று கருதி இல்லையென்னுமல் ஈந்து உவக்கும் இயல்புடையவர் இயற்பகை நாயனுர்.

ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வண்கணவர் — திருக்குறள்

இவரது பண்பினையும், சிவனிடத்துள்ள அடிமைத் திறத்தினையும் உலகிற்குணர்த்த எண்ணினர் ஈசனர். நெற்றியில் திருநீறு உடலில் அத்தர், நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டு உடையவராய், காமனை எரித்த கண்ணுதற் கடவுள் காமுக வேடத்தில் இயற்பகையார் இல்லந்தேடி வருகின்றார்.

வந்த அடியவரைத் தெய்வமாகப் பூசித்தார் இயற்பகை யார். வந்தவர் உன்னுடைய வள்ளல் தன்மையை அறிந்து மகிழ்ந்து, உன்னிடத்தில் ஒன்று வேண்டி வந்தோம் என்றார். '' என்னிடத்தில் ஒன்று உண்டு என்றால் அது அடியவர்களது உடைமையேயாகும்;'' எனவே அருள் செய்யுங்கள் என்றார் இயற்பகையார். தூர்த்தர் வேடத்தில் வந்த அடியவர், மன்னு காதல் உம் மனைவியை வேண்டி வந்தேன் என்றார். மனைவியைக் கொடு என்று கேட்கவில்லை. மன்னுகாதல் உம் மனைவியைக் கொடு என்று கேட்டார். ஒருநாள், ஒரு விநாடி யேனும் அன்பு குறையாத நிலை பெற்ற காதலை உடைய உன் மனைவியைக்கொடு என்று கேட்டார் என்று சேக்கிழார் பெருமான் ஆழ்ந்து அனுபவித்துப் பாடுகிறார்.

இச்சொல்லைக் கேட்கின்றவர் யாராயிருப்பினும் நாடி நரம்பெல்லாம் சூடேறும் ஆனால் நாயனர் முன்னையினும் பன்மடங்கு மகிழ்ந்தார். நல்ல வேளை, அடியவர் நம்மிடத்து உள்ள பொருளையே கேட்டாரே என்று மகிழ்ந்தாராம். மனைவியைக் கேட்டவரும் ஒரு அடியவர் ஆவாரோ! அது பிறன்மனை நயந்த பாதகம் ஆகாதோ! என்பன போன்ற கேள்விகள் எழும் ஆனால் அன்பு மிகுந்த பொழுது அங்கு ஆராய்ச்சிக்கு இடமில்லை என்பது இங்கு விளங்குகிறது.

இயற்பகையார் தன் மனைவியை நோக்கி உன்னை இந்த மெய்த்தவத்தினருக்குக் கொடுத்து விட்டேன் என்றார்.

அதனைக் கேட்ட மனைவியார் முதலில் கலங்கினுர் பின் மனம் தெளிந்தனர், இதனைச் சேக்கிழார்

''இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல்
என்னு யிர்க்கொரு நாத நீர் உரைத்த
தொன்றை நான்செயும் அத்தனை யல்லால்
உரிமை வேறுள தோஎனக்[கு]'' என்று
தன்தனிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனுர் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.

என்று பாடுகின்ருர்.

அழகினுல் லெக்ஷ்மியை நிகர்த்தவள் பண்பினுல் அவளினும் பெரியவளானுள்.

நாம் யாவரும் சிவபெருமானின் நாயகியர். சுவாமி பார்த்து என்ன சொல்கிருரோ அதையே நாம் செய்ய வேண்டும். இது சீவன் முத்தர்களின் நிலை. ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்ருர் மணிவாசகர். அதே மனோபாவத்தில் பேசுகிருர் இயற்பகையாரின் மனைவியார்.

அவர் மாதவரின் சேவடி பணிந்து நின்ற பிறகு நான் இன்னும் என்ன செய்ய வேண்டும், என்ருர் இயற்பகையார்.

காதன் மேவிய சுற்றமும் பதியும் கடக்கத் துணை போதுக என்ருர் மாதவர். அதனையே சிரமேற்கொண்டு தன் சுற்றத்தாரும் நண்பர்களும் எதிர்க்காமல் அவ்வூரினைக் கடக்கும் வரை இயற்பகையார் உடைவாளும், பலகையும் ஏந்தி

வழித்துணையாகச் சென்றார். முன்னே அடியவர், அவரைத் தொடர்ந்து அம்மையார், இருவருக்கும் பின்னே இயற்பகை யார் இப்படி மூவரும் சென்றனர். இதனை அறிந்த சுற்றத்தார் சீறினர் '' இயற்பகை பித்தனானல் மாதினை வேறொருவன் கொண்டு போவதா? யாம் விடமாட்டோம் என்று கூடிவந்து தடைசெய்தனர். வந்த அடியவர் பயந்தவர் போல் நடித் தனர். மனைவியார் ''இறைவனே அஞ்சவேண்டா இயற்பகை வெல்லும்'' என்றனர் போர் மூண்டது சுற்றத்தார் பலரும் இறந்தனர். பலர் ஓடிப்போயினர். இயற்பகையார் திருச் சாய்க்காடு வரை உடன் சென்று வழிவிட்டபின் அடியவரின் விடைபெற்று மீண்டனர்.

செயற்கரும் செயல் செய்த அன்பரை மகிழ்ந்து நோக்கிய ஆண்டவர் மாசுமருவற்ற உள்ளம் உடையான் திரும்பிக் கூடப் பார்க்காமல் செல்லுகிறான் என்றெண்ணி

இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்!
அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம் ஓலம்!
செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்
மயக்குறு மறைஓலிட்டு மாலயன் தேட நின்றான்

இறைவனிடம் மறைகளெல்லாம் ஓலமிட்டுமுறையிடு கின்றன,

ஓல மறைகள் அறைகின்ற ஒன்றது என்பார் அருணகிரி நாதர், இறைவனே ஓலமிட்டதைக் கேட்ட அடியவர் இதோ வந்தேன் என்று ஓடிவந்தார். மறையவர் மறைந்தார். மனைவி மட்டும் இருக்கக் கண்டார்.

சென்றவர் முனியைக் காணார் சேயிழைதன்னைக் கண்டார்
பொன்திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின் மேற் பொலிந்ததென்னத்
தன்றுணையு டனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர்; தொழுது வீழ்ந்தார்; நிலத்தினின்றெழுந்தார் நேர்ந்தார்.

விண்ணிடை சிவபெருமானை ரிஷபாரூடராகக் கண்டு மனைவியும் தானும் சிவலோகம் சென்று இன்புற்றிருக்கின்றனர்.

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்ற கருத்துப்படி, கணவனார் கருத்துப்படி ஒழுகும் பண்பினை இச்சரிதத்தினால் சேயிழையார் பெண்ணுலகிற்குப் போதிக்கின்றனள். தனக்கென்று ஒரு விருப்பு வெறுப்பு இல்லாத தன்மை இருந்தாலன்றி கணவனார் கருத்தறிந்து ஒழுகும் பண்பு உண்டாகாது. அத்தன்மை வருவதற்கு விருப்பு வெறுப்பில்லாத இறைவனை நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், மென்றாலும், துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் சிந்தையில் மறவாத பண்பினை ஒவ்வொருவரும் பயில முயலுதல் வேண்டும். அப்பயிற்சிக்கு எம்பெருமான் அருள்புரியப் பிரார்த்திப்போமாக.

# அலங்கார நாயகன்

## 29, காலத்தை வெல்லுதல்

திருமதி, ஆர். பார்வதி, தமிழாசிரியை
நாமக்கல்

ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகள் சேர்ந்த உடம்பு ஒரு கோட்டையைப் போன்றது உயிர் என்ற அரசன் வாழ்வதற்காக இந்த உடம்பாகிய கோட்டையை வகுத்துக் கொடுத்திருக்கிருன் ஆண்டவன். முன்னுலே செய்திருக்கும் வினைப்பயனை அநுபவிக்க உடம்பு வந்து விடுகிறது. இந்த அற்புதக்கோட்டைக்கு ஒன்பது வாயிலை வைத்துஆண்டவன் அனுப்பியிருக்கிருன், இந்தக் கோட்டையிலிருந்து அரசு செய்யும் ஆத்மா என்னும் அரசனுக்கு இரண்டு மந்திரிகள் முக்கியமானவர்கள், ஒருவன் நல்ல மந்திரி, மற்ருெருவன் கெட்ட மந்திரி, மனம் என்பதுதான் கெட்டமந்திரி, புத்தி என்பது நல்லமந்திரி, அரசன் எவ்வளவு திறமையுடையவன் ஆயினும் தானே ஒரு செயலைச் செய்ய முடியாது. மதியமைச்சர்கள் மூலம்தான் செய்வான், அமைச்சர்களின் அறிவைத் தன் அறிவுக்குத் துணையாகக் கொண்டவன் நல்ல அரசன், சிறந்த அரசன் தன் அறிவாற்றலால் சிந்தனை செய்து மந்திரிகளோடும் ஆராய்ந்து தான் செய்யநினைத்த காரியம் சிறந்தது என்று முடிவு கண்டால் அதைச்செய்வான். செய்யத்தகாது என்று கண்டால் அதைச் செய்யாது விட்டு விடுவான்.

சக்கரவர்த்தித் திருமகனுகிய இராமபிரான் அப்படித்தான் செய்தார். இராவணனேடு போர் புரிவதற்காகக் கடலைத் தாண்டிச் சென்ருர். வீடணன் இராமபிரானைச் சரண் என்று வந்தடைந்தான். சரண் அடைந்த அவனைத் தன் கட்சியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது அவர் எண்ணம் இருந் தாலும்-அமைச்சர்களின் கருத்தையும் அறியவேண்டும் என்று எண்ணினுர் தம் கட்சியில் புதிதாகச் சேர்ந்துக் கொள்ள விரும்புகிற வீடணன் தங்களுக்கு அனுகூலமாக இருப்பானு? பகைவர்கள் கட்சியிலிருந்து வந்தவனுயிற்றே, இராவண னுடைய சொந்தத்தம்பி அவனைப் பற்றி எதுவுமே தெரியாத போது அவனை ஏற்றுக்கொள்ளலாமா இதைப்பற்றிவிவாதிக்க மந்திரி சபையைக் கூட்டி ஆலோசித்தார். மந்திரிகளுக்கு மதிப்பு வைத்து அவர்களுடைய அறிவைத் தம் அறிவுக்குத் துணையாகக் கொண்டார். அவருக்கு நல்ல மந்திரியாக அநு மன் வாய்த்திருந்தான்.

ஆத்மாவாகிய அரசன் புத்தி, மனம் என்ற இரண்டு மந் திரிகளைக் கொண்டு எப்பொழுதும் வேலை செய்கிருன், புத்தி என்ற நல்லமந்திரியின் வேலை அதிகமாகஇருந்தால் உய்யலாம். மனம் என்ற கெட்ட மந்திரியின் வேலை அதிகமாக இருந்தால் கீழேதான் போக வேண்டியிருக்கும், புத்தி அதிகமாக வேலை செய்தால் மனம் புத்திக்கு அனுகூலமாக இருக்கும் மனதின் ஆற்றல் கூடுதலாக இருந்தால் புத்தி மடங்கிவிடும்.

இந்த உடம்பாகிய கோட்டையில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இந்தக் கோட்டையில் ஐந்து நுட்பமான வாயில்களை வைத்திருக்கிருர்கள் ஐம் பொறிகளின் வழியே அடிக்கடி அரசனுகிய ஆத்மாவைத்தாக்கபகைவர்கள் உள்ளே நுழையப் பார்ப்பார்கள் காதாலே நல்லதைக் கேட்கலாம். தீயதையும் கேட்கலாம், வாயினுலே ஆண்டவன் திரு

நாமத்தை ஜபிக்கலாம், பேசத்தகாத வார்த்தைகளையும் பேசலாம் உடம்போடு வாழ்கின்ற வாழ்க்கையில் புத்தி என்ற அமைச்சனின் துணை ஆத்மா என்னும் அரசனுக்குஎப் பொழுதும் இருந்தால் உடம்பாகிய கோட்டைக்குள் இருக்கும் இந்திரியங்கள் எல்லாம் தமக்குரிய நெறியில் நின்று ஒழுக்கம் மிக்க செயல்களையே செய்யும் நமக்குக்கிடைத்த காலத்தைத் தக்க வழியில் பயன்படுத்தத் தெரிந்துக் கொள்ள வேண்டும். காலத்தை நாம் கொல்ல வேண்டும், இல்லாவிட்டால் காலம் நம்மைக் கொன்றுவிடும் என்பார்கள். நம் நாட்டில் எல்லாக் காலத்திற்கும் பயன்படுகிற வேலை இறைவழிபாடு. பற்பல கோயில்களைக் கட்டி ஆறு கால பூசையை ஏற்படுத்தி அவரவர்களுக்கு எந்தக்காலத்தில் ஒழியுமோ அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்க, துதிக்க வழி வகைகளைச் செய்துள்ளனர். சொந்தமாக இறைவனை நினைந்து பாட ஆற்றல் இல்லாவிட்டால் பல்லாயிரக் கணக்கான பாடல்களை நாம் பாடி மகிழப் பெரியவர்கள் அருளிச் செய்துள்ளனர். அவற்றையெல்லாம் ஒருமுறை படிப்பது என்றாலே நமக்கு ஆயுள் போதாது, இயன்ற அளவு அவற்றைப் படித்து ஆழ்ந்தால் மன அமைதி உண்டாகும்

ஆண்டவன் வழங்கிய உடம்பிலுள்ள அவயவங்களை அவன் பால் செலுத்தி நல்லொழுக்க நெறியில் நிற்பதைச் சீலம் என்று சொல்வார்கள். யமனைப் பார்த்து "அந்தகா வந்து பார்" என்று அறை கூவினர் அருணகிரியார். அதை முன் பாட்டில் பார்த்தோம், அந்தநிலை எப்படி வந்தது என்ற வினவுக்கு விடையே போல் இந்தப் பாட்டைச் சொல்கிறார். வாழ்க்கையைப் பயனுடையதாக வைத்து சீலத்துடன் வாழ்ந்தால் காலத்தை வெல்லலாம் அதுவே காலனை வெல்ல வழி என்று சொல்கிறார்.

"நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் சிவ யோகிகளே
காலத்தை வென்று இருப்பார் மரிப்பார் வெறும் கர்மிகளே"

நீலச் சிகண்டி = நீல நிறம்பொருந்திய மயில், நீலநிறம் பொருந்திய மயிலின் மேல் வருகின்ற பெருமான் அவன் ''எந்த நேரத்திலும் அவன் நீலச்சிகண்டியில் வருவான் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான் என்று எந்த நேரத்திலும் என்ற சொற்களை முன்னும் பின்னும் கூட்டிக்கொள்ளவேண்டும். இதை இலக்கணத்தில் இடை நிலைத்தீவகம் என்பர். பிரான் = என்பது பிரியான் என்பதன் மரூஉ. எப்பொருட்கண்ணும் யாண்டும் பிரியாதிருப்பவன் என்பது பொருள் இதன் பெண்பால் பிராட்டி,

முருகப் பெருமான் அழகிய வள்ளி நாயகியுடன் அருணகிரி நாதர் நினைக்கும் போதெல்லாம் வந்து காட்சி தருவார் என்பது இதனால் விளங்குகிறது. எந்த நேரமாயினும் வருவார் என்பது மட்டும் அன்று; எங்கே நினைக்கினும் அங்கெல்லாம் வந்து காட்சி தருவார் என்பதும் அவருடைய திருவாக்கால் அறியலாம்.

"செங்கேழடுத்த சின வடி வேலும் — திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிருதோளும் பதுமமலர்க்
கொங்கே தாளும் சொரியும் செங்கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந்து எதிர் நிற்பனே"

*கந்தர் அலங்காரம்*

சிவபெருமானுக்கும் அகத்திய முனிவருக்கும் குருமூர்த்தியாகிய கந்தக்கடவுள் அருணகிரியாருடைய செவியிலும் ஞானோபதேசம் செய்தனர். ஆதலின் அருணகிரி நாதர் தனக்கு குருநாதன் முருகனே என்று உணர்த்துகின்றார்.

"சுகஞானக் கடல் மூழ்கத்தந்
தடியே னுக்கருள் பாலிக்கும்
சுடர்பா தக்குக னேமுத்தின் கழல் வீரா"

திருப்புகழ்

காலத்தை வெல்ல வேண்டியவர்களாகிய நமக்கு இறைவனை நினைத்த பொழுது அவன் வருவான்; அவனுக்கு அடியார்களுக்கு அருள் புரிவதற்கென்று ஒருகாலம் இல்லை அவன் எப்போதும் வருவான் அவனுக்கு அதுதான் வேலை,

சிறந்த வள்ளல்களாக இருந்தவர்களுக்கே இன்ன நேரத்தில்தான் கொடை வழங்குவார்கள் என்றவரையறை இல்லை, மலையமான் திருமுடிக்காரி என்பவன் ஒரு வள்ளல் அவனைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றிலே இருக்கின்றன அவனிடம் பரிசு பெறப் போகிறவர்கள் நல்லநாள் பார்த்து சகுனம் பார்த்துச் செல்ல வேண்டும் என்பது இல்லை. நல்ல நாள் இல்லாவிட்டாலும், சகுனம் ஆகாவிட்டாலும் தம்குறையை எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லாவிட்டாலும் போகிறவர்கள் வெறும் கையோடு வரமாட்டார்கள். அவன் கொடைக்கு நாள் இல்லை எப்போதும் கொடுப்பவன்

"நாளன்று போகிப் புள்இடை தப்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறபி பெயர்குவர் அல்லர் நெறிகொளப்
பாடான்று இரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடியோரே"

முருகன் வள்ளல்களில் பெரிய வள்ளல், அவனுக்கு இன்ன காலம் என்ற வரையறைஇல்லை, அவனை எப்பொழுது வேண்டுமானாலும் திருப்புகழ் பாடித் துதிக்கலாம். எதற்கும் ஒரு காலம் குறிப்பிட்டு வேலை செய்கின்ற நாம்ஆண்டவனைத்

துதிக்கவும் ஒரு காலம் வேண்டுமே என்று கலங்க வேண்டாம் எப்போது கூப்பிட்டாலும் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவன் வருவான்.

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர ணுகிய கொள்கையைச்
சிறுமை என்று இகழாதே''

என்பது திருவாசகம் எப்பொழுதும் ஆண்டவனை நினைத்து வாழ்வதே குருநாதன் சொன்ன சீலம். இந்த சீலத்தை யார் கடைபிடிக்கிருர்களோ அவர்கள் சிவயோகிகள், சீலம் என்பது ஒழுக்கம், வாக்கினுலும் உடம்பினுலும் செயலாலும் அவற்றிற்குரிய ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் காலத்தை வென்றிருப்பர், வேகமாக ஓடுகின்ற உள்ளத்தை இறைவன் திரு நாமத்தைச் சொல்லிச் சொல்லி நிறுத்திஞல் அதுவே யோகம், இறைவனை நினைந்து செய்கின்ற கர்மமே யோகமாகி விடுகின்றது கர்மங்கள் நிஷ்காம்ய கர்மம், காம்ய கர்மம், என இருவகைப்படும் எவன் கர்மத்தின் விளைவில் கருத்தை வைத்துச் செய்கின்ருனே அவனுக்குப் பிறவி உண்டு, பிறவியினுல் வரும் துன்பம் உண்டு பலனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் எது வந்தாலும் வரட்டும் என்று இறைவன் பேரில் பாரத்தைப் போட்டு ஒழுக்க நெறியிலே நின்று எவன் கர்மத்தைச் செய்கிருனே அவனுக்குப் பிறவி இல்லை, துன்பமும் இல்லை அவன் செய்வது வெறும் கர்மம் அல்ல யோகமாகிய கர்மம், அவன் கர்மயோகி, இறைவனை நினைக்காமல் தான் செய்கின்ற கர்மங்களின் பயனையே நினைந்து வாழ்பவன் காலத்தைக் கொல்ல

மாட்டாமல் தவிக்கிருன் அவனைக் காலம் பயமுறுத்தப் பின்னர் காலன் வந்து பயமுறுத்துகிருன். இத்தகையை வெறும்கர்மிகள் மரிப்பார்கள். இதுவே இப்பாடலின் கருத்து

"நீலச் சிகண்டியில் ஏறும்
பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன் வரு
வான்குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார் சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப்
பார் வெறும் கர்மிகளே"



# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத் புருஷ தேவநாம
திரு. சு. இராமலிங்கம் அவர்கள்,
கனித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சிகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

பண் நட்டராகம் (திருச்சிரபுரம்) இரண்டாந்திருமுறை

கோலமாகரி உரித்தவர் அரவொடும் ஏனக் கொம் பிளஆமை
சாலப் பூண்டுதண் மதியதுசூடிய சங்கர னுர் தம்மைப்
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத்தார்மிடற் றண்ணலார் சிரபுரந் தொழவினை நில்லாவே

திருச்சிற்றம்பலம்.

பரங்கருணைத்தடங் கடலாகிய தில்லைக்கூத்தப்பெருமான் திருவருளினுலே திருச்சிரபுரத்து நட்டராகப்பண் இரண்டாவது திருப்பாடலின் அமுதத்தை பருகுவோமாக. பெரிய அழகிய யானையை உரித்தவர் பாம்பு பன்றிக்கொம்பு இளமையான ஆமையின் ஒடு மிகப்பூண்டவர் குளிர்ச்சியான சந்திரனைச் சூடியவர் உயிர்களுக்கு சுகத்தைச் செய்பவர் என்பது முதலிரண்டடியின் பொருளாகும். கயமுகாசூரன் என்னும் யானை முகமுடைய அசுரன் பிரமதேவனிடத்திலும் சிவபெருமானிடமும் வரம் பெற்று தேவர்களையெல்லாம் வென்று கொன்று யாரும் யுத்தத்திற்கு கிடையாமல் கைலாசத்திற்கு சென்ருன்,சிவபெருமானை போருக்கழைத்தான். சுவாமியானவர் தமது திருக்கையினுல் அவனுடைய தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். கறுத்தயானையின் பெரிய

தோலை போர்த்துக் கொண்டதும் உமாதேவியானவர் பார்த்துப்பயந்து நடுங்கிவிட்டாளாம் அவள் பயந்ததைப் பார்த்து சுவாமி சிரித்து விட்டாராம் என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

"உரித்திட்டார் ஆனையின்றோல் உதிர ஆறொழுகியோட
விரித்திட்டார் உமையாளஞ்சி விதிர் விதிர்த்தலக்கணெய்தி
தரித்திட்டார் சிறிது போது தரிக்கிலராகித்தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்ற திருப்பயற்றூரனாரே.

என்று சுவைபடக் கூறுகின்றார். தாருகாவனத்துரிசிகள் சிவ பெருமான் மீது பாம்புகளை ஏவினார்கள். அவைகளை தமது திருமேனியிலே ஆபரணமாக அணிந்து கொண்டார். அதனால் அவனுக்கு புயங்கபூஷணன் சர்ப்பாபரணன் என்னும் திரு நாமம் விளங்கலாயிற்று கொல்லவந்த நாகங்கள் ஆபரணமாக விளங்குகிறது. தேவரீர் அணிந்திருப்பது பாம்பு, உண்டது விடம் உடை தோல் இருப்பிடம் சுடுகாடு இரண்டு ஊரில் ஒரு ஊரை ஒற்றிவைத்து விட்டீர். இன்னொரு ஊரை ஆரூர் என்று எல்லாரும் கேட்கும் படியாயிற்று. இப்படி உள்ள தேவரீருக்கு திருத்தொண்டு செய்யும் தொண்டர்கள் என்ன பொருளை தேவரீரிடமிருந்து பெறுவார்கள் என்று சுவையாகக் கூறுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம் பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரே லும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச் சடையில் வைத்த அடிகேளுந்தம்
ஊருங்காடு உடையுந்தோலே ஓணகாந்தன் தளியுளீரே.

என்பதாகும் அப்பாடல் பாந்தள்பூணாரம் என்பது திருவிசைப் பா. பாம்பு போன்ற விடக்குணமுடையவர்களானாலும் சிவ பெருமான் திருவடியை அடைந்தால் நல்லவர்களாகி விடுவார்கள் பெருமையடைவார்கள் என்பது திண்ணம் திருப்பாற்

கடல் தாளியாகவும் மந்தரகிரிமத்தாகவும் வாசுகியென்னும் பாம்பு கயிருகவும் தேவர்களும் அசுரர்களும் நின்று கடைந் தார்கள். அப்போது மந்தரகிரிகடலிலே அமிழ்ந்தது, மகா விஷ்ணுவானவர் ஆமை வடிவமெடுத்து தாங்கி நின்ருர் அமுதங்கடைந்தார்கள். அதனுல் செருக்கடைந்த விஷ்ணு வானவர் சமுத்திரத்தில் ஆமை வடிவாக இருந்து கலக்கி அட்டகாசம் செய்தார், தேவர்கள் பயந்து சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் முருகப் பெருமானே அனுப்பி ஆமையைக்கொன்று, அதன் ஓட்டைக் கொண்டு வந்தார் அந்த ஓட்டை சிவபெருமான் மார்பிலே அணிந்து கொண்டார். பிரமவிஷ்ணுக்களின் சிரமாலேகளுக்குநடுநாயக மாக அணிந்தாராம். சிவஞான சுவாமிகள் பாடுகிருர்.

மகரந்திளேக்கும் கடலேழு மலங்கக்கலக்கும் பசுந்துளவ
முகைவிண்டலர்தா ராமையிளேப் பற்றித் தகர்த்தமுதுகோடு
நகுவெண்டலேமாலிகையணிக்கு நடுநாயகமாக் கோத்தணிந்து
புகரின்றுயர்ந்தோர் தொழப் பொலிந்தபுத்தேள் செல்வத்திருவுருவம்.

என்று காஞ்சிப் புராணம் கூறுகின்றது. இரணி யாக்கன் என்னும் அசுரன். பூமியைப்பாயாக சுருட்டிக் கொண்டு கடலுக்குள் சென்று மறைந்து விட்டான். தேவர் கள் திருமாலிடத்தில் சென்று விண்ணப்பிக்க அவர் கோரமான பெரிய பன்றி வடிவமெடுத்து கடலுக்குள் ஒளித்திருந்த இரணியாக்கனேக் கொன்று பூமியை தனது கொம்பிலே தாங்கி வந்து நிறுத்தினுர். அந்தக்காரியத்தை செய்ததால் நாமே சகலமும் வல்லவன், என்று ஆணவங்கொண்டு உலகங்களே பன்றி வடிவாக இருந்து கொண்டு அழிக்கத் தொடங்கினுர். தேவர்கள் பயந்து சிவபெருமானிடத்திலே சென்று முறை யிட்டார்கள். உடனே சிவபெருமான் பன்றியின் கருவத்தை அடக்கி அதனுடைய கொம்பை பறித்து மார்பிலே அணிந்து கொண்டார். விஷ்ணுவாகிய பன்றி கருவம் ஒடுங்கி தனது

லோகமாகிய வைகுந்தத்திற்கு சென்றது. சிவஞான சித்தியார் தெளிவாகக் கூறுகின்றது. நன்ருகப் படித்துணர வேண்டிய பாட்டுக்கள்.

"ஆமையாய் மேருத்தாங்கி அடைகலாய்க் கிடந்த போது
நாமெனு உலகாதார நாதனென்ற கந்தை பண்ண
ஆமெனு ரன்று மென்னு ரமராருமானுர் பார்த்து
தாமநாள் ஆமையாரை தகர்த்தோடு தரித்தாரன்றே.

"எழுதலம் இடந்து பன்றியாயிருங்கொம்பிலேற்று
தொழுதுலகிறைஞ்சநின்ற சோதி நானென்ற போதன்
றழுதலமந்து வீழ அருங்கோடு பறித்தணிந்தான்
கழுதலமந்த காட்டில் ஆடிடுங்கடவுளன்றே.

என்னும் திருப்பாட்டுக்களால் உணர்ந்து கொள்ளலாம் இந்த வரலாற்றின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டிய விஷயம் முக்கியமானது. அதாவது மகா விஷ்ணுவுக்கு பலங்கொடுத்தது சிவபெருமான். மந்திரகிரியைத் தாங்கியது பூமியை மீட்டது முதலாகிய அதிசயச் செயல்கள் செய்ய அருள் புரிந்தது சிவபெருமான் ஆனுல் விஷ்ணுவானவர் மல சம்பந்தியாகையால். நாமே எல்லாம் செய்தோம் என்று கர்வித்தார். கருணுசமுத்திரமாகிய சிவபெருமான் அவர் கருவத்தை அடக்கியருள் புரிந்தார். விஷ்ணு முதலான எல்லா உயிர்களும் செய்கிற செய்திகள் அனைத்தும் சிவபெருமான் அனுக்கிரகத்திஞலேயாம். நாம் இந்தக்காரியத்தை செய்து விட்டோம் என்று கர்வித்தால் விஷ்ணுவுக்கு வந்தது போல் நமக்கும் தண்டனை கொடுப்பார். யான் செய்தேன் என்று எண்ணுவது மிகவும் தவருனது. சிவஞானசித்தியாரில் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்து
தான் செவ்வே நின்றிடவும் அத்தத்துவன் தான் நேரே
தனையளித்து முன்நிற்கும் வினையொளித்திட்டோடும்
நான் செய்தேன் எனுமவர்க்கு தான் அங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங்கன்மம்
ஊன் செய்யா ஞானந்தான் உதிப்பினல்லால்
ஒருவருக்கும் யானெனதிங்கொழியாதன்றே

என்னும் திருப்பாடலால் தெளியலாம் தெளியவே விஷ்ணு முதலாகிய உயிர்கள் கடவுளாக மாட்டார்கள். அவர்களை கடவுள் என்று எண்ணுவது மிக அறியாமையாகும். அவர்கள் கடவுளல்ல சிவபெருமானே கடவுள் என்பதற்கு சிவபெருமான் அணிந்திருக்கும் பன்றிக்கொம்பு ஆமையோடு தலைமாலை முதலியவைகளே சான்றாக நிற்கிறது. இதையறியாமல் விஷ்ணுவுங்கடவுள், பிரமனுங் கடவுள் சிவனுங்கடவுள் என்பது பெரும்பாவத்துக்கு ஆளாவதே யன்றி அவர்கள் பத்தியால் அடைந்த பயன் சிறிதுமில்லை கடவுள் என்றால் ஒருவர்தான். அவர் பிறப்பு இறப்பு இல்லாதவர் அதற்கு பெயர் சிவம் என்பது மிகமுக்கியமான விஷயம். விஷ்ணுவுக்கு பிறப்பு பல உண்டென்பதும் அவர் எல்லா யோனியிலும் பிறந்தாரென்பதும் நன்றாக தெளியவேண்டுமானால் திவ்வியபிரபந்தம்படிக்க வேண்டும் நம்மாழ்வார் பாடுகிறார் கேளுங்கள்

ஓவாத்துயர்ப் பிறவியுட்பட மற்றெவ் வெவையும்
மூவாத்தனி முதலாய் மூவுலகும் காவலோன்
மாவாகி யாமையாய் மீனாகி மானிடமாம்
தேவாதிதேவ பெருமானென் தீர்த்தனே

என்றும் சன்மம் பலபல செய்து வெளிப்பட்டு என்றும் எங்கின்றயோனியுமாய் பிறந்தாய் என்றும் இன்னேரன்ன வாக்குகளால் பிறப்பிறப்புடையவர் திருமால் என்பதை உணர்ந்து கொள்ளவும். பிறப்பிறப்பில்லாதவர் சிவபெருமான் ஒருவனே என்று சிந்தையில் வைத்துக்கொள்ளவும் சிவபெருமான் ஒருவரே எல்லையில்லாத கருணையுடையவரென்பது அவர் தலையிலே குற்றஞ்செய்த சந்திரனைச் சூடியதால் நன்கு உணரலாம் சுகத்தை செய்பவர் என்பது அவர் திருப்பெயராகிய சங்கரன் என்பதால் அறியலாம் இக்கருத்துக்களை ஞானசம்பந்த சுவாமிகள். கோலமாகரி உரித்தவர் அரவொடும் ஏனக் கொம்பிளஆமை சாலப்பூண்டு தண்மதியது சூடிய சங்கரனுர் என்பதால் தெளியவைக்கிருர். அடுத்த வாக்கு மிக அருமையானது. தம்மைப்போலத்தம்மடியார்க்கும் இன்பளிப்பவர். என்பதாகும். சிவபெருமானை அடைந்தவர்கள் சிவபெருமானைப்போலவே ஆகிவிடுவார்கள். சாரூபபதவியைப்பெற்றவர்கள் சிவரூபத்தை பெறுவார்கள் அவர்கள் திருநேத்திரம் திரிசூலம் நீலகண்டம் சடையில் கங்கை பிறை கொன்றை பாம்பு எலும்பு தலைமாலை நான்கு திருக்கரங்கள் முதலியனவுடையவராய் சிவபெருமானைப்போலவே விளங்குவார்கள். இப்படி சாரூபநிலையைப்பெற்று சிவபெருமான் நடுவிருக்க ஒரேமாதிரியாக எண்ணில்லாத சிவசாரூபிகள் சூழ்ந்திருப்பார்கள் சிவனைப்போல எண்ணில்லாதவர்கள் சூழ்ந்திருக்கிற படியால் பிரமாவும், விஷ்ணுவும் சிவபெருமானை எப்படிக்கண்டு பிடிப்பார்கள் என்று பாடுகிருர் குமரகுருபர சுவாமிகள்

கண்ணிருக்குந் திருநுதலுங்கனலிருக்குந் திருக்கரமுங்கலந்தோர் பேதைப்
பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக்கு மவுலியுமாய்ப் பிரிக்கலாகா
எண்ணிருக்குங் கணத்தொடுமானந்த வனத்திருப்பாரை யெங்கேகாண்பார்
பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ணனுங் கண்ணனுமமரர் பலருந்தானே.

சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றவர்களுக்கு சிவபெருமானுடைய எட்டுக்குணங்களும் அமைந்துவிடும் எட்டுகுணங்களாவன முடிவிலாற்றல்,தன்வயத்தனுதல் முற்றுமுணர்தல், பேரருளுடைமை, தூயவுடம்பு, இயற்கையுணர்வு இயல்பாக பாசங்களினீங்குதல், வரம்பிலின்பம் ஆகிய இவ்வெட்டுக் குணங்களுடையவர் சிவபெருமான். காஞ்சிப் புராணங்கூறுகின்றது

"முடிவிலாற்றலே தன்வயத்தினே முற்றுணர்ச்சியை பேரருண்
மடிவிலாட்சியை தூய மேனியை மற்றியற்கை யுணர்ச்சியை
படியிலா வியல்பாக நீங்கிய பாசநோயை வரம்பிலின்
புடையை யுண்னடி யேங்களென்று முனக்கடைக்கலமையனே"

இந்த எண்குணங்களை தன்னை அடைந்தஅடியார்களுக்கு கொடுத்தருளுவார். கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான் தாளைவணங்காத்தலை என்பது திருக்குறள். எண் குணத்துளோமே, என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. சிவபெருமான் தன்னைப்போலவே தன்னை அடைந்த அடியார் களுக்கும் பேராத இன்பத்தை தந்தருளுவார் என்பதை தம் மைப் போலத்தம்மடியார்க்கு மின்பளிப்பவர் என்பதனுல் விளக்குகிருர். பொருகடல்விடமுண்டநீலத்தார் மிடற்றண்ண லார் என்பது அடுத்த திருவார்த்தை. திருப்பாற்கடலிலே அமுதங்கடைந்த போது முதலில் விடம் வந்தது. விஷ்ணு முதலாகிய எல்லோரையும் துரத்தியது. சிவபெருமானைச் சரணடைய அவர் சுந்தரரை அனுப்பிஅவ்விடத்தை கொண்டு வரும்படி செய்து அவ்விடத்தைச் சாப்பிட்டார். தேவர்கள் வேண்டிக்கொள்ள விஷத்தை கண்டத்திலேயே நிறுத்தியருளினுர். இதனுல் சுவாமிக்கு காளகண்டன், நீலகண்டன். நஞ்சுண்டேஸ்வரர் கறுத்தகண்டன், மணிகண்டன் என்று திரு நாமங்கள் விளங்குகின்றன. சைவர்கள் இத்திருநாமங்களை மக்களுக்கு இட்டு மகிழ்வார்களாக.

## திருவாசகத்தில் ஒரு வாசகம்

கோலாலமாகி குரைகடல்வா யன்றெழுந்த
ஆலாலமுண்டா னவன் சதுர் தானென்னேடி
ஆலால முண்டிலனே லன்றயன் மாலுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ

என்னும் அருமைத்திருவாசகத்தை அன்பர்கள் சிந்தையில் வைத்து விஷத்தை சாப்பிட்டு விஷ்ணு முதலாகிய எல்லோரையும் காப்பாற்றியவர் சிவபெருமான் என்று நினைந்து உய்வார்களாக, தேவமாதர்களுடைய காதிலே ஓலையிருப்பது சிவபெருமான் கருணையினுலாம்.குமரகுருபர சுவாமிகள் பாடுகிருர்.

நம்பா நினக்கோல முறையோ வெனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாங்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் என்னும் பாடலையும்.

சிந்திப்பார்களாக ஒருவன் பிறவித்துண்பத்திலிருந்து விடுபட வேண்டுமானுல் அதற்கு காரணமாகிய வினைநீக்கம் பெற வேண்டும் வினைநீக்கம் பெற வேண்டுமானுல் சிவவழிபாடு, குருவழிபாடு, சங்கம வழிபாடு அவசியம் வேண்டும். இம் மூன்று வழிபாடுமில்லாமல் பலபேர் பிறவியை ஒழித்து முத்தியடைய விரும்புகிருர்கள் ஆகாயத்தினுடைய தோலை உரித்து அணிந்துகொள்ள முடியுமானுல் இவர்களும், வழிபாடு இல்லாமல் முத்தியடைந்து விடலாம். ஆகாயத்தினுலுடைய தோலை காணவும் முடியாது. உரிக்கவும்முடியாது, உடுக்கவும் முடியாது அதுபோல குருலிங்க சங்கம வழிபாடு இல்லாமல் எவ்வளவு காலம் ஆனுலும் முத்தி

யடையமுடியாது. இது சத்தியம் கந்தபுராணப் பாடலைப் படியுங்கள்

பரசிவனுணர்ச்சியின்றி பல்லுயிர்த்தொகையு மென்றும்
விரவிய துயர்க்கிறெய்தி வீடு பேறடைது மென்றல்
உருவமில் விசும்பின் தோலைஉரித் துடுப்பதற் கொப்பென்றே
பெருமறை இயம்பிற்றென்னில் பின்னுமோர் சான்று முண்டோ

ஆகவே பிறவிவினைநீங்க மூன்று வழிபாடு அவசியம். இக் கருத்தை ஞானசம்பந்தசுவாமிகள் சிரபுரந் தொழவினை நில்லாவே என்றருளிச்செய்துள்ளார். ஆகாமியந்தோலைய அன்பர்கள் முயற்சி செய்து ஞானசம்பந்தர் காட்டிய வழியில் நடந்துய்வோமாக.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

(தொடரும்)



# சுந்தரர் துய்த்த இன்பம்

எஸ். எஸ். சீதாபாய் அம்மாள் அவர்கள் விக்கிரமசிங்கபுரம்

(மார்கழி இதழ் பக்கம் 624-ன் தொடர்ச்சி)

## சிற்றின்பம்

ஆனந்தம் — சிற்றின்பத்தில் குறைந்த மகிழ்ச்சி, இதற்கு எல்லையுண்டு. எல்லா உயிர்களும் நிகழ்த்தும்படியான சிறிய இன்பமே. திருப்தியாகாது பின்னும் அவாதணியாமல் ஐம்புலஇன்பம் உண்டாகியும் மறைந்தும் தோன்றுவதால் எல்லையையுடையது.

அடுத்து, வெள்ளத்திளைத்து மூழ்குதல், திளைப்பதாக நினைத்தல், சிறுதுளிநீரில் மூழ்குவதெப்படி? சிற்றின்பம் மாறுபடும் தன்மையுடையதால் இன்பத்தில் துன்ப உணர்ச்சியும் உண்டாகி இன்பத்தோடு துன்ப நிலையும் தோன்றும்

மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்தார். மக்கள் வாழ்வில் எவ்வளவு போக பாக்யத்தில் வாழ்ந்தாலும் நிலைத்தஇன்பத்தில் வாழ முடியுமா? மனம் உடல் முதலியன நாளாவட்டத்தில் தளர்ந்து நரை, திரை, மூப்பு, இறப்பு, முதலியவற்றை உண்டாக்குவது, நோய் நொடிகளால் துன்புறும் நிலை ஏற்படுகிறது.

## பேரின்பம்

ஆனந்தஎல்லையில் கூத்தனின் பேரின்ப வெள்ளத்துள்திளைத்தார் வந்த பேரின்பம் என்பது சுந்தரர் துய்த்த இன்பத்தை அழியாதது, எல்லையற்றது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். 'ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் ஈர் உருக்கொண்டு, ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால் ஒக்கும அம்பலம் சேர் ஆனந்த வெள்ளத்து அறை கழலோன் அருள் பெற்றவரின் ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது'' என்று கோவையார் பாடலில் அருள் பெற்றவரின் இன்பம் குறைவுபடாது ஒரு காலத்தும் என்று கூறும் கவிநயம் காண்க.

இங்கு வெள்ளம் என்பதால் அதில் திளைத்து மூழ்கி நின்றார் மிகுந்த வெள்ளமானதால் அளவை மிகைப்படுத்துகிறார். ஆசிரியர் அடுத்து மாறிலா மகிழ்ச்சி என்றார். பின் மலர்ந்தார் என்று குறிப்பிடும் நயம் காண்க. உள்ளக்கமலம் மலரப் பெற்றார். மாறிலா மகிழ்ச்சியும்

இன்பமும் உள்ளக்கமலக்கட்டை அவிழ்த்து மலர்வதை மலர்ந்தார் என்று கூறுகிறார். இந்நிலையில் முன்னையநிலையைவிட, புத்துரு வமும், புத்துணர்ச்சியும், புது நிலையும், தெய்வீக ஒளியையும் பெற்று இன்புறுதல்

**தொனிப் பொருள்:** இந்து வாழ்சடையான் ஆடும். நிலவு குளிர்ந்தது பேரின்பமும் குளிர்ந்தது மாறாத பிறவா இறவா வாழ்வைத்தருவது திருக்கூத்துக் காட்சி வாழ்வு – அமரவாழ்வு என்பதற்கு வாழ் என்றார் சடையைக்குறித் தமை சடை ஞானத்தைக் குறிப்பிக்கும் என்பது சைவாகமங் கள் கூறுகின்றன. ஆகலால் ஞானக்கூத்தையும், ஞானத் தால் பேரின்பத்தை அடைதலையும் குறிப்பதோடு என்றும் அழியாத இன்பத்தைக்குறிக்கும் இதனை "மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே என்று பிறப்பின் பயனை அடைந்த மணிவாசகர் நமக்கும் அதனைக் காட்டி பயன்பெறச் சொல்லி யுள்ள அருள்வாசகம் காண்க.

**ஆனந்த எல்லையில்:** சுந்தரர் பெருமகிழ்ச்சிமய மானதும், எல்லையற்றதும் ஆகிய தனிப்பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து, மூழ்கித்துய்த்து, மாறிலா மகிழ்ச்சியுள் - மாறாத நிலையிலே, உள்ளக்களிப்பிலே. மலர்ந் தார் - பொங்கு மிளிர்ந்தார் என்று சுந்தரர் அனுபவித்த இன் பத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

## சுந்தரர் அனுபவம்

பரவையாரோடு இவர் புரிந்த காதல்யோகம் தெய்வீக மானது. சிவபெருமானே ஒரு மணத்தை மாற்றி, இருமணத் தைச் செய்வித்தார். நம்பியும் நங்கையும் சிவ யோகியர்களாய்

சிவத்தில் ஒன்றி அதனை நினைந்து நினைந்து சிவமயமான வாழ்வோடு வாழ்ந்து காட்டியநிலையை சேக்கிழார்பெருமான் "பன்னாளும் பயில்யோக பரம் பரையின் விரும்பினார்" என்று கூறுகிறார். தேவர்பிரான் திருவருளாலே இணைக்கப்பட்ட இருவரும் தெய்வீக காதலில், யோகிகள் பரம்பரையாக யோகத்தை விரும்புவது போல, யோகநிஷ்டாபரராய் இருக்கும் வழிமுறையை விரும்பி யோகம் புரிந்தார்.

தற்காலத்தில் இல்லறத்தில் வாழ்பவர்கள் தங்கள் வாழ்க்கையை சுலபமாக யோக சாதனைகளாகப் பண்ணலாம் என்று சுவாமி சிவானந்தர் குறிப்பிடுகிறார் அன்றாடவாழ்வில் இல்லறத்தில் வாழும் பொழுதே செயல்கள்யாவும் ஈஸ்வரசிந்தனையுடன் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை இறைவனோடு தொடர்புபடுத்திக்கொண்டு வாழப்பழகிக்கொள்ளுங்கள். அதுவே சிறந்த யோகம் என்கிறார். (Divine Life) தெய்வீக வாழ்க்கையாக உங்கள் வாழ்வு மலரட்டும் என்று குறிப்பிடுகிறார். இந்த முறையாலே திருவருளைப்பெற்ற காலத்து உண்டாகும் சிற்றின்ப வாழ்க்கை எல்லாம் பேரின்ப வாழ்வாய் சிவானுபவமாய் முடியும்படிக்கு வரும் என்றும், பின்பு தனுகரண போகங்கள் உண்டாகாது என்றும் பெரியோர் கூறியுள்ளார்கள். இதனை

"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும் பரிசு உந்தீபற
முளையாது மாயை என்று உந்தீபற

என்று திருவுந்தியார் பாடலில் காணலாம்

சுந்தரர் துய்த்த இன்பம் இல்லறத்தில் வாழும் போதும் திருவருளால் கிடைக்கப்பெற்ற சிற்றின்பத்தில் பேரின்பத்தையே கண்டு சிவத்தைச்சிந்தித்து சிவநிலையில் நின்று, கருவிகரணங்களெல்லாம் சிவஞானநிலையில் அவையாகவே ஆக்கிப்

பேரின்பம் பெற்றவர், அவர் துய்த்த இன்பம் சிற்றின்பமன்று என்பதற்குச் சான்றாக புதியது என்னுமல் 'பன்னாளும் பயின்ற யோகத்தையே பரவையாரிடம் கண்டார்'' என்றும் சுந்தரர் மனமொழிமெய் மூன்றும் சிவத்திடமாக இருந்து பரவையாரின் துணையுடன் பேரின்பம் பெற்றார் என்று கூறுகிறார் ஆசிரியர். இத்தகையபாடல் சுந்தரர் தில்லையில் வழிபட்ட காட்சியை, நினையாமல் நினைந்து - உலகை நோக்காமல் சிவத்தையே நினைந்து, தற்போதவழியில் சிந்தியாமல், திருவருள் வழிநின்று சிந்தித்துப் பிறவித் தொடர்ச்சியை வெல்ல வேண்டும் என்று கூறும். சுந்தரர் தாம்பெற்ற இன்பத்தை

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய்!
உன்தன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்தபிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம்''

என்று கண்களில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைமலர் உச்சிமேற் குவித்து பண்ணினால் பதிகம் பாடிப்பரவினார் பணிந்தார் என்று கூறும் பாடலில் சுந்தரர் துய்த்த இன்ப நிலையை காவியத்தின் மூலமாக அவர் நின்ற நிலையை ஓவியக் காட்சியாகக் காட்டியருளுகிறார் சேக்கிழார் பெருமான். அறிவரும் பதிகங்களைப்பாடுவதோடு சிந்தித்து வந்தித்து வழிபடுவோமாக.

சுந்தர மூர்த்திகள் திருவடிகளை வழுத்துவோம்.

273.

# செவிபடைத்த பயன்

சி குமாரஸ்வாமி
( செந்திலடிமை )
' செந்திலகம் '
1/126 G. சிங்காரத்தோட்டம்
வண்டலூர், சென்னை. 48

முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன் "கல்கி" தீபாவளி மலரில், "வெற்றி நகரம்" என்ற தலைப்பில் திருச்செந்தில் கந்தனைப் பற்றி ஒரு சிறு கட்டுரை, படத்துடன், இருந்தது அதில் ஸ்ரீ ஆதிசங்கரர் அவர்களால் பாடப்பெற்ற ஒரே சுப்பிரமண்ய ஸ்தலம் இதுதான் (திருச்செந்தூர்) என்று இருந்தது. இதைப் படித்ததும், அவரால் பாடப்பெற்ற நூல் எது என்று அறிய ஆவல் ஏற்பட்டது எனவே, 'கல்கி" ஆசிரியர் அவர்களுக்கே எழுதிக் கேட்டேன். அவரும் மனமுவந்து தெரிவித்தார். இந்நூல் அடியேனுடைய பாராயண நூலில் ஒன்றாகவும் ஆயிற்று. இதன் தமிழாக்கம் (13-2-66)' கல்கியில் வந்தது (திரு. கலாபாரதி அவர்கள் மொழிபெயர்ப்பு). இது சர்க் கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் மகிழ்ச்சியைத் தந்தது எனக்கு!

ஸ்ரீ ஆதிசங்கரரை காசநோய் மிகவும் தொல்லை கொடுத் தது. இந்நூலைப்பாடியபின் அந்நோய் நீங்கியது இதைப் பாராயணம் செய்தால் உடல்நோய், பிறவி நோய் மனநோய் மூன்றும் நம்மை அண்டாது.

இது 33 புஷ்பங்களைக் கொண்ட மலர்மாலை, அதாவது 33 பாடல்கள் கொண்ட நூல் எளிதில் பாராயணம் செய்து விடலாம். முதலில் மூஷிக வாகனருக்கு வணக்கம் கூறுகிறார் பிறகு அவையடக்கம் சொல்கிறார். மூன்றாவது பாடலிலிருந்து முருகப் பெருமானை நமக்குக் காட்டுகிறார். (ஸ்ரீஷண்முகரை!) இதோ அவர் வாக்கு :-

' ஸ்ரீ ஷண்முகப் பெருமான் வேதங்களின் உட்பொருள், பிறவிப் பிணியைப் போக்கும் மருந்து, அவனுடைய கந்த மாதன மலைக்குச் சென்றால் கைலைமலைக்குச் சென்றவராக லாம். மனிதர்களின் மனக்கவலைகளை அகற்றும் ஸ்வயம் பிர

காசன். ஒளி வீசும் தங்கமயமான திருப்பள்ளியறையில் நறு மலர்க் குவியல்களால் பரப்பப்பட்ட மாணிக்கக் கட்டிலில் எழுந்தருள்பவன்.

அவனுடைய திருவடி ஒலிக்கின்ற சிலம்புகணையணிந்தவை, மிகவும் சிவந்தவை, மனத்தைக் கவரும் எழிலமுதம் நிறைந்த அழகான கமல சரணங்கள்.

இடையில் பொன்னொளி நிறைந்த திவ்ய ஆடைகள் பிர காசிக்கின்றன, ஒலிக்கின்ற சலங்கைகளோடு கூடின மேகலை உளது. கனகமயமான பட்டையத்தோடு அந்த இடை ஒளி வீசுகிறது.

வள்ளியம்மையின் ஆலிங்கனத்தால் ஏற்பட்ட குங்குமப் பூச்சால் உண்டான செந்நிறமானதும், எப்போதும் தன் பக்தர்களைக் காப்பாற்றுவதில் ஆசையோடு இருப்பதால் உட் புறம் போன்று வெளிப்புறமும் சிவந்து தோன்றும் அகன்ற மார்பையுடையவன்.

அவனுடைய புஜங்கள் உலகத்தைக் காக்கும் ஆற்றல் படைத்தது. இணையற்ற பிரகாசமான ஆறு திருமுகங்களை யுடையவன். அன்னம் போன்ற வெண்மையான புன்சிரிப் பையும், வண்டுகள் போன்ற கருவிழிகளையும், கோவைக்கனி போன்ற சிவந்த உதடுகளையும் உடைய செந்தாமரையொத் தவை அவ்வாறு திருமுகங்கள், அவனுடைய பன்னிரு கண் களில், ஒன்றின் கடாக்ஷமே நமக்கு எண்ணற்ற நலன்களை அளிக்கும், வேதத்தின் ஆறு மஹா வாக்யங்களே ஆறு திருமுகங்களும்.

மிக்க ஒளிவீசும் ரத்ன மயமான தோள்வளைகள், முத்து மாலைகள், அசையும் குண்டலங்கள், இடையில் பீதாம்பரம், கையிலே அழகியவேல், இவையனைத்தும் அவனுடைய அழ குக்கு மேலும் அழகு கூட்டுகின்றன. முருகன், அடியார் களைக்காப்பவன் அவனைத்தியானித்தால் யமன் நம்மை அண்டமாட்டான். அவனே நமக்கு அபயமளிப்பவன் எனவே, கந்தனை நாம்விடாது, போற்றித் துதித்துப் பிடித்துக்கொள்ள வேண்டும். அவனைத்

தியானித்தால் மனக்கவலை நீங்கும், மனோவியாதி போகும். எல்லா வியாதியும் ஸ்ரீசண்முகப் பெருமானின் பன்னீர்இலை, விபூதியைக் கண்டவுடன் விலகியோடும்.

திருச்செந்தில் முருகனைக் காணவேண்டும் நமது கண்கள், நமது கரங்கள் ( கைகள் ) அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும், அந்த திருச்செந்தில் கந்தன் புகழைக் கேட்பதே நாம் **செவி படைத்த பயன்.** நமது வாயானது எப்போதும் அவன் சரித்திரத்தையும், திருப்புகழையும் சந்தத்துடன் பாடிக்கொண்டே இருக்கவேண்டும், நம் உடல் வாழ்க்கையும் சீரலைவாய்ப்பெருமானிடமே அடைக்கலமாக வேண்டும் ( பாட்டு 26 )

**சாதி, சமய வேறுபாடின்றி, உயர்வுதாழ்வு வேற்றுமை இல்லாமல், இழிந்த குலத்தவர்களும் அவர்கள் விரும்பியதை அளிக்கும் ஓரே தெய்வம் முருகன் ஒருவன் மட்டுமே!**

( பாட்டு 27 )

குடும்பத்துடன் அவனை வழிபடவேண்டும். கொடிய விலங்குகள், துன்பந்தரும் கொட்டும் ஈக்கள், உடலைத்துன் புறுத்தும் பிறபிணிகள் இவையனைத்தையும் தன்வேலால் அழித்து விடுவான் '' ( இது வேலின் மகிமை ).

மேற்கண்டவாறு ஸ்ரீஷண்முகப் பெருமானை நமக்குக் காட்டுகிறார் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர். முருகனுடைய வாகனங்களாகிய மயிலுக்கும். ஆட்டுக்கும், வேற்படைக்கும், அருகிலுள்ள கடலுக்கும், அவன் எழுந்தருளியுள்ள ஊருக்கும், மீண்டும் மீண்டும் வணக்கம் கூறி வெற்றி முழக்கம் செய்கிறார். கடைசியாக, இத்தோத்திர நூலைப் பக்தியுடன் பாராயணம் செய்வதால் ஏற்படும் பலனைக் கூறி முடிக்கிறார். அது இது:-

" இந்தத் தோத்திரத்தை எவர் பக்தியுடன் பாராயணம் செய்கிறார்களோ அவர்கள் நன்மக்கள், மனைவி, தனம்,

தான்யம், சம்பத்து ஆகிய நற்பேறுகளைப் பெற்று முடிவில் ஸ்ரீ சுப்ரம்மண்யக் கடவுளின் திருவடிகளை அடைவார்கள்''.

இப்போது புரிகிறதா இது என்ன நூல் என்று? இது எந்த ஊர்? புரியவில்லையா? இந்த அருமையான தோத்திர நூல்'' ''ஸ்ரீ சுப்ரமண்யபுஜங்கம்.'' ஊர்: திருச்செந்தூர் (ஜெயந்திபுரம்=வெற்றிநகரம்!).

முடிவுரை:- திருகலாபாரதி அவர்களின் 26வது பாடல் மொழி பெயற்பில் உள்ள சொற்றொடர் தான் மேலே உள்ள தலைப்பு. ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற அவாமேலீட்டால் இக்கட்டுரை எழுதப்பட்டது. வாசக அன்பர்களுக்கு ஸ்ரீ செந்திலாண்டவன் எல்லா நலன்களும் அருள்வான்.

இந்த புஜங்க நூலுக்கு, கோவைக்கவியரசு. கு நடேசக் கவுண்டர் அவர்கள் தமிழ் மொழி பெயர்ப்பும், சென்னை ஸ்ரீ காமாக்ஷிதாஸர் (மைலாப்பூர்) அவர்கள் மொழி பெயர்ப்பும் உள்ளன. சென்னை கிரிபிரஸ் வெளியிட்டுள்ள உரை நூல் ஒன்றுளது. அண்மையில் எனது மதிப்புக்குரிய நண்பர் வித்வான் ச.ரா. கச்சபேஸ்வரன் M.A. அவர்கள் (முருகனருள் வெளியீடு —4) பதிப்பித்த மிக எளிய, தெளிவான உரை நூலும் வெளிவந்துள்ளது. இதன் உரையாசிரியர் ஓய்வு பெற்ற சம்ஸ்கிரத துணைப்பேராசிரியர் திரு. R.N. பத்மநாப அய்யர் M.A.,L.T., அவர்கள்.

இந்தக் கட்டுரை நடமாடும் தெய்வமாக விளங்கும் பெரியவாள் (சங்கராசாரிய சுவாமிகள்) பொற்பாத கமலங்களுக்கு சமர்ப்பணம்.

**கந்தனைக் காணவே கண்கள், கரங்களும் அவன் பணிக்கே**
**செந்தில் முருகன் புகழ் செவிபடைத்த பயனுகும்**
**சந்ததமும் அவன் சரிதம் சந்தமொடு வாய்பாடும்**
**சிந்தனையும் உடல் வாழ்வும் சிரலைவாய்க் கந்தனுக்கே.**

முருகாசரணம்.